# ஆதி மார்க்க னீதி மொழி

**June 2024**

***இதழ் 35 – ஜூன் மாதம் 2024 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்நோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்நு மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, மலர் விரிய விரிய மணம் கமழ்வது போல் மாதந்தோறும் வெளியாகும் இம்மின்னணு சஞ்ஞிகை முப்பத்தி ஐந்தாவது இதழாக மாறாத தெய்வீக மெய்ம்மணம் கமழ மலர்ந்து வருகிறது.

இவ்வுலகமே திரண்டு வந்தாலும், இப்பொழுதும் எப்பொழுதும் நாம் மெய்யையே பேசுவோம் என சாலை ஆண்டவர்கள் அருளிய திருச்செயலானது, இன்றளவும் நடந்து வருவது சத்தியம். அதற்குரிய யோக்கியதையும் தகுதியும் அருகதையும் அறிவும் உள்ள மக்களுக்கு அச்செயலை இறைவனே நம் நாவில் நின்று அருள் பாலிக்கிறார்கள். அங்ஙனம் வெளியாகும் யுகாந்த நாட்டு செல்வம் யாவற்றையும் தொகுத்து வழங்குவதே ஆதி மார்க்க னீதி அவையின் மின்னணு சஞ்ஞிகை.

பொய்யும் மெய்யும்பி ரித்துனக் கோதிடும்
மெய்ன்னி லைப்போத மென்றவி தாகுமே

என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, பொய்கூட இன்னதென அறியாத மக்களுக்கு பொய்யை அறிவித்து அதனுள் இருக்கும் மெய்யை உணர வைப்பது, வாயில் பேசுவதும் காதில் கேட்பதும் அல்லாத, நிரூபிக்கும் செயலாக உள்ளது. சார்ந்ததின் வண்ணமாக மாறக்கூடிய நம் மனம் எப்பொழுதும் பொய்யையே மெய்போல் காட்டுகிறது. எல்லா பாவங்களுக்கும் காரணமாக இருக்கின்ற இம்மனதை மெள்ள மெள்ள மெய்யறிவு உதயம் காட்டி அக விளைவு குடியேற்றும் அரும்பெரும் செயலை ஆக்கிவைத்த பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி நிழல் படிந்தே நாமும் இச்செயலை தொடர்ந்து நடத்தி வருகிறோம். இதனை சார்ந்து வரக்கூடிய மக்கள் உள்ளத்தெளிவைப் பெற்று மரணமிலாப் பெருவாழ்வு வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் மலர்ந்து வருவதே இம் மின்னணு சஞ்ஞிகை.

பிறப்பு இறப்பின் ரகசியமே மரணம், அது கடந்து அப்பால் இறப்பும் பிறப்பும் இல்லாத கங்குல் பகலற்ற ரகசிய உலகம் ஒன்று உள்ளது. அவ்வுலகில் நாம் உடலுள்ள போதே குடியேறி வாழ வேண்டும் என்றே உலகில் வந்த வந்த வேதங்கள் யாவும் வலியுறுத்துகின்றன. அதை தத்துவமஸி, அகம் பிரம்மாஸ்மி, பிரக்ஞானம் பிரம்மம், அகம் ஆன்மா பிரம்மம் என்றெல்லாம் கூறினாலும் அகம் சார்ந்த நிஜமான மெய்வாழ்வாகிய அம்மெய்யான



Copyright © AMNA Trust, Chennai June 2024

**மெய்வழியை, சாலை ஆண்டவர்கள் 1976 ஆண்டு வரையிலும் கூவியழைத்து, 5049 மக்களுக்கு அதனை ஆக்கி வைத்தார்கள்.**

**இன்றும் இதே செயலானது ஆதி மார்க்க நீதி அவை என்ற நாமத்துடன் நிகழ்ந்து வருவதை மக்கள் யாவரும் பெற்று உணர்ந்து பயனடைய வேண்டும் என்றே இச்சஞ்ஞிகையானது மலர்ந்து கொண்டே இருக்கிறது. இதன் மாறா மெய்மணத்தை மக்கள் எல்லோரும் பெற்று மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்வாங்கு வாழ்வு வாழ வேண்டும் என எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வாழ்த்துகிறேன்.**

**நமஸ்காரம்.**

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*மனிதர்கள் மாறி மாறிப் பேசுவார்கள். னாம் அப்படிப் பேச மாட்டோம். ஏன்? உலகத்தை உய்விக்கின்ற ஒரே தொழில்தான் எமக்குத் தெரியும்; ஆகவே அதையே அன்றும் பேசினோம், இன்றும் பேசுகிறோம், என்றும் பேசுவோம், செய்வோம். எல்லோரும் இந்த மெய்ஞான னித்திய செல்வத்தைப் பெற்று அனுபவிக்க வேண்டு மென்பதே எமது முழு இச்சை.*

*வேத சாஸ்திரங்ஙளைப் படித்துத் தேர்ந்து எம்மிடம் வரவேண்டியதில்லை. சர்வலோக சரண்யனைப்பற்றி னாம் போதிக்கும்போது உன் அறிவே உனக்கு வாத்தியாராக னின்று விளங்ஙும். ஆகவே எமது வார்த்தைகளை உன் காதில் னுழையும்படிச் செய்துகொண்டால் போதும். அது உனக்கு அறிவிக்க வேண்டியதை எல்லாம் அறிவிக்கும்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai June 2024

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 மே மாத அவை நிகழ்வுகள் – 2024 ஜூன் மாத வெளியீடு

## 01-05-2024 ~ புதன்கிழமை ~ தூத்துக்குடி சிறப்பு அவை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மோதய மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் தூத்துக்குடியில் மே தின சிறப்பு அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**




சமுசாரிகளாகிய பெரியோரிடம் நல விளைவுப் பொன்னில வளத்து மாணாக் கண்ணாளரெனும் குழாங்கள் சூழ்ந்து நிற்கும் தொழிலாளர் நாம். நமது தொழில் மெய்க்கல்வி பழகி வருவது. **பவக்கடல் தவிக்கும் மாந்தரை கரைசேர் பரு மரக் கலனாக** வரும் பெரியோர்களின் பொன்னேட்டில் பெயர் பதியப் பெற்றவர்கள் கலந்து கொள்ளும் அவையாக விளங்குவதே **ஆதி மார்க்க னீதி அவை.** குருவருளால் அவரவரின் ஜீவ சிம்மாசனத்தை அறிந்து உணர்ந்தவர்களே பிறவாமை பெறுவர். நடுப்பொருளாக விளங்கும் திருச்சிற்றம்பலப் பொருளே அறிவாகும். பிறந்ததினி இறவாத பேசும் பஞ்ஞாட்சரத்தை ஆதி மான்மியத்தில் 13 நிலைகளாக சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். வினைப் போகத்தால் தேகம் தாங்கி வந்த மானிடனுக்கு தன்னை அறிதல் என்பது கடமையாகும். சூக்குமம் எனும் பிரம்மத்தை அறிந்து பிராமணனாகி, அதை தன் வசமாக்கி அந்தணனாகி, அதனை தன் சொற்படி கேட்க வைப்பவனே வேதியன். என்றும் அறுந்து போகாத ஆசானின் தொப்புள் கொடி உறவுடன் நிலைத்தால் புலன்களை எளிதில் வென்று தர்ப்பை எனும் அருகுனுணி வாசலுள் இருக்கும் இறைவனை நாம் அறியலாம். 96 தத்துவங்களின் தலைவனை அறியும் செவிச்செல்வம் பெறும் இடமே **ஆதி மார்க்க னீதி அவை.**

*ஜீவசகோதரர் வடிவேலன்:* முத்தொழிலும் ஐந்தொழிலும் அறிந்த ஐங்கரனாகிய ஆசான் அருளால் முப்பொருள் கோல விளக்கமும், முத்தொழிலும் அறிந்து ஐம்புலனை வெல்வதே தன்னை அறிதல். அசலை உணர்த்த ஆகம விதிப்படி வந்த கோவில்களில் நடக்கும் செயல்கள் யாவும் நகலாகவே உள்ளது. அசலான இறைவனை வணங்கும் தொழிலே வழிபாடு. சிவராஜ பாட்டையில் வழிகூடி நடக்கும் தொண்டராம் மெய் ஆசானே, நரனை மனுவாக மாற்றும் அசலான தொழில் செய்யும் முதலாளி. வேழ முகமும் விளங்கு செந்தூரமும் கொண்டு வினை தீர்க்கும் தொழில் செய்பவரே தொழிலை ஆளும் தொழிலாளி.

*ஜீவசகோதரர் மணிமாறன்:* மெய்ப்பயணத்தில் பெரியோரை தொடர்ந்து வரும் நாம் பல ஜென்மங்களாக உடல் கடந்து, மனம் கடந்து, கவனத்தின் மூலமாக பிறவாமை பெறவே வந்துள்ளோம்.

*ஜீவசகோதரர் குமார்:* மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் வீற்றிருக்கும் இறைவனே முதலாளி. தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்வதே அனைவரின் தொழிலாகும். இதனை தடை செய்யும் நவக்கிரகங்களின் ஊனத் தொழிலை மாற்றும் நாத ஜோதிடரே மெய்ஆசான். மேல் நோக்கமான காமில்களின் னாதத்தை செவி மடுக்கும் ஒவ்வொரு நாளும் மே தினமே.



Copyright © AMNA Trust, Chennai June 2024

*ஜீவசகோதரர் பழனிவேல்:* தன்னை அறிந்த ஞானிகளிடம் சார்ந்து சரண் அடைவதற்கான பாடாகிய உழைப்பே தொழிலாக உள்ளது. மனமாக இருந்த நம்மை அறிவாக மாற்றும் குருவின் செயலே இக்கடத்தை நீக்கி அக்கடத்துள் ஆக்கி மோட்சம் அருளும் செயலாகும். குபேரனாம் சிவ குருபிரானின் அருளே என்றும் குறையாப் பணமாக உள்ளது.

**குருபிரான் அருளமுதம்**:

**மெய்யென் றெவர்களும் வாய்புலம் புவதலா லறியார்**
**மெய்யெனும் பொருப்பீ தெனமனம் தெளிந்நவ ருலகில்**
**மெய்யை மெய்யென மேவிடார் மெய்யரா குவரேல்**
**பொய்யை மெய்யெனும் புலையரேன் புண்ணிய ராகார்.**

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

## 02-05-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. வாசுதேவன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **அறுபுரி னூல் பிரானிலை யறியான்…** என்ற ஞான முறையீடு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
பிராணனின் நிலையே அறுபுரி நூல் என அறிந்தவனே பிராமணன். பிறவிப் பெருங்கடலெனும் நெருப்பாறு மயிர்பாலம் கடக்க குருவினிடம் காவற்பாடு தேட வேண்டும் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

**திருமெய்ஞானக் கொரல் - வாக்கியம் 3ன் தொடர்ச்சி:** ஒருவரின் வாழ்நாள், குணம், நவகிரகங்களின் ஆதிக்கம் யாவற்றிற்கும் அவர் உதித்து வந்த தந்தையின் எண்ணமே காரணம். அவரவரிடத்தும் கேடு விளைவிக்கும் தசா புத்தியை சீராக்கவும், கிரகங்களை அஸ்தமிக்க செய்யும் சக்தியும் மெய்ஆசான் ஒருவருக்கே உண்டு. நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் ஏக பராபர பூரணத்தைக் காண்பதற்கான அறிவை தன்னில் அறிய, ஆதியும் அனாதியுமாக விளங்கும் நடுநிலை அறிந்த நாயகத்தின் அருளே துணை.

*ஜீவசகோதரி தபேஸ்வரி :* **கோவில் தல வரலாறு -**
**ராமேஸ்வரம் கோவில் :** சிவன் - ராமநாதசுவாமி. அவருக்கான அபிஷேக நீர் காசியின் கங்கை தீர்த்தம். அம்பாள் - பர்வதவர்த்தினி - தாமரை மேல் நின்ற கோலம், சீதாப்பிராட்டி செய்த மண்ணாலான லிங்கம், ஆதிசேஷனின் மறு அவதாரமான பதஞ்சலி முனிவரின் ஜீவசமாதி - இவை இக்கோவிலின் சிறப்பாகும்.

**திருப்புல்லாணி கோவில்:** புல்லாகிய தர்ப்பையின் மேல் நின்ற, அமர்ந்த, சயன கோலத்தில் இருக்கும் பெருமாள் - ஆதிஜெகன்நாதர். தாயார் – பத்மாஸினி. தல விருட்சம் 300 ஆண்டுகள் பழமையான அரசமரம் - இவை இக்கோவிலின் சிறப்பாகும்.

**உத்தரகோசமங்கை கோவில்:** சிவபெருமான் – மங்களநாதர். அம்பாள் – மங்களாம்பிகை. மாதாகிய மங்கைக்கு உபதேச ரகசியம் அருளிய தலமாதலால் உத்தரகோசமங்கை. தலவிருட்சம் 3000 ஆண்டுகள் பழமையான இலந்தை மரம். இவை இக்கோவிலின் சிறப்பாகும்.

ஷேத்திராடனம் செல்வது தன்னை அறியவே. கங்குல் பகலற்ற இடம், கருவறை, அதனுள் இருக்கும் இறைவன், ஓரறிவு தாவரங்கள் இவற்றின் ரகசியம் யாவும், நால்வகை யோனி கடந்து தேவயோனியில் பிறந்த மக்களே அறிவர். உள்ளமாகிய பெருங்கோவிலில் வீற்றிருக்கும் அருவுருவாகிய இறைவனை அறியும் அறிவை புகட்டும் தலமே **ஆதி மார்க்க னீதி அவை.**

**குருபிரான் அருளமுதம் - பிள்ளைத்தமிழ் :** எழுதாத எழுத்தாக விளங்கும் பிள்ளையார் சுழியைக் கொண்டே அகரத்துள் ஆக முடியும். குறில் நெடிலாக விளங்குவதே அச்சரம். அது



Copyright © AMNA Trust, Chennai

அறுந்து விடாமல் காப்பதே விஸ்வநாதம். அதனுள் ராக, தாள, பாவங்களின் ரகசியத்துடன் உயிரின் உன்னத நிலை உணர்த்தும் தெய்வீகப் பாடல்கள் பொதிந்த கிரந்தமே சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள **ஆதி மெய் உதய பூரண வேதாந்நம்** என்ற குருபிரானின் அருளமுதுடனும், பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

## 04-05-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

ஸ்ரீ மாணிக்கவாசகர் அருளிய **படியதனிற் கடினசித்த பசுபாசம் தவிரவிடும்...** என்ற திருஞானத் தாழிசை பாடலுடன் அவை மலர்ந்தது.

**கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 174 :** பஞ்சு பூதத்தில் ஒன்றான **தீ** சர்வத்தையும் தன்மயமாக்குவது போல், ஆசானின் பிரம்மபிரகாச தீ எனும் விபூதி, நம் பாவங்களை சுட்டெரித்து, தன்மயமாய் நின்றிலங்கும் தஜல்லியமாகிய எமனணுகா பரிசுத்த தேகத்தில் குடியேற்றி வைக்கிறது.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*
**பரிசுத்த வேதாகமம் : எபேசியர் - அதிகாரம் : 4 திருவசனம் - 6 & 7** நேத்திரங்கள் இரண்டானாலும் காணும் காட்சி ஒன்றே என்பது போல், சர்வ அண்ட சராசரங்களிலும் நிறைந்திருக்கும் இறைபொருள் ஒன்றேயாம். ஞான சூரியனாக வரும் குருபிரானின் அருட்கடாட்ச கிருபையே நம்மை பூரணனான புதியவனாக, அப்போஸ்தலராக, தீர்க்கதரிசிகளாக, மேய்ப்பராக, போதகராக, மெய்ஞானிகளாக மாற்றி வைக்கிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* **படி** எனும் சொல் உலகை குறிப்பதாகும். திருவள்ளுவர் அருளிய திருக்கொரலின் படி, ஐவழி விளைவிற்கும் காரணப் பொருளாக நின்று விளங்கும் தன் உலகை அறிந்த பெரியோர்களே உலகநாதன். சொல் ஏர் உழவனாகிய அவரே நம் பாசத்தை வேறுத்து பதியாகிய இறைவனுடன் இரண்டற கலக்க செய்கிறார்கள். இறைவனின் கஜானாவில் இருந்து நம் குருபெருமான் அருளிய *வேத பொக்கிஷங்கள் -*

*செங்கமலப் பதம் என்பது சீதக்களப செந்தாமரை பூம்பாதமாக, ஆண்-பெண் அற்ற நிலையின் ரகசியமாக உள்ளது.*

*ஐக்கிய பதியும் அசைவிலா குன்றாய் நின்று விளங்குவதே ஏகாட்சரமாகும். இருள் நாசமாகும் இடமே நாசி.*

*முந்தியே வந்த துந்தி நந்தி நடு பந்தியாகிய ஆன்மப் பொருளாகிய சிற்றணு வடிவே அவரவருள் ஆதம் பாதமாக நின்று இலங்குகிறது.*

*நிமிடம், நாழிகை என்ற காலத்தின் சூட்சுமம் பொட்டு எனும் பரிபாஷையாக வேதத்தில் அருளப் பெற்றுள்ளது.*

நம் குருபிரான் வாரி வழங்கும் எண்ணிலடங்கா பொக்கிஷங்களை அனைவரும் வரமாய் பெற்று பேரின்பத்தை அடைய வேண்டும் என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

*பிரியமுள்ளவளே! ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், கீர்த்தி, திரு என்று சொல்லப்பட்ட செல்வம் இவ்வாறு ஆறு குணங்ஙளாகிய ஐசுவரியத்தை யுடையவரான தூலத்தில் உள்ள பகவானே ஸ்ரீ குருவாவார்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 05-05-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

சாலை ஆண்டவர்கள் அருளிய **னல்லகதி னிலை னிலவுல கெலாம் விளங்ங...** எனும் தௌஹீது காமீல் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* மனுத் தலையில் விளங்கும் னித்திய மெய்ப் பொருளை குருபிரான் தனது வாக்காகிய தீயினால் அறிவித்து, நமது மும்மலம் நீக்கி முச்சுடராகிய அறிவுப் பிரகாசத்தில் ஏற்றி வைக்கிறார்கள். எண்ணம், சொல், செயல் மூன்றிலும் நன்மையே செய்வதின் மூலமே ஒரு சற்குரு பிரானிடம் சரணாகதி அடைய முடியும். மெய்இச்சை ஆர்வமும் வைராக்கிய சித்தமுமே, ஆசான் அருளும் சாகாக்கல்வி மூலம் புகழுடம்பில் உடலுள்ள போதே குடியேறி வாழ்வதற்கான வழியாகும். முழு முதற் கடவுளாகிய குருபிரானே, நம் முழு முதற் பொருளாகிய அகரத்தை அறிவுக்கண் கொண்டு காணச் செய்கிறார்கள். எழுவகை தோற்றத்தில் இல்லாத நரன், குருவின் திருனாவிலிருந்து வரும் டமரக ஓசையால் மனுவாகி தேவனாகி தெய்வமாகிறான். வித்தில்லா வித்தின் மூலமாக அன்னாட்டிற்கே உரிய வித்தாக நம்மை தேர்ந்து எடுப்பவரே மெய்க்குருபிரான்.

*ஜீவசகோதரர் குமார்:*
எதார்த்த உள்ளம் கொண்ட நன் மக்களுக்கே எதிர் முகத்தில் போதிக்கும் ஒரு மெய்யான குருபிரான் வாய்க்கிறார். ஞானம் பெறத் தடையாக இருப்பது அவரவரிடத்தும் மனமாக உள்ளது. குருவின் அறிவுப்பிரகாசமே நம் மனதின் பிடியிலிருந்து நம்மை விலக்கி காக்கிறது. எமன் எல்லையில் வெற்றி பெறச் செய்யும் ஆசானின் அருளமுதமே பிறவிப் பிணி தீர்க்கும் ஔஷதமாகும்.

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 05-05-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி, **பூமகட்கோர் திலதமென பொலிவுற்றோங்கும்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரி வசந்தி:* குருவருளால் அறிவில் தெளிவு பெற்று, மனித நேயம் மிகுந்து பிறர் குற்றம் காணாது குழப்பமற்ற வாழ்வு வாழக் கற்றுத்தந்த இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரி தீபா முருகேசன்:* அழியாத ஜீவதேகமே நாம் என குருவின் தயவால் அறிந்து அழிதேகம் விட்டு அகமியச் செயல் அறிய வைத்த குருவருளே திருவருள்.

*ஜீவசகோதரர் காளிராஜன்:* ஆறாவது அறிவின் மேன்மையையும், பிரம்மத்தை சார்ந்தவர்களே பிரம்மச்சாரி என்பதையும், ஆசானே அறிவு வடிவு என்பதையும் உணரவைத்து, மாண்புடைய மனிதனாக நம்மை மாற்றி அறிவு வழி நடத்தும் குரு வாஆழ்க.

*ஜீவசகோதரர் ஏகாம்பரம்:* உழவாரப்பணி, கிரிவலம், அன்னதானம், ஜீவகாருண்யம், ஜோதி தரிசனம் என்ற புறச்சடங்குகளின் அகமிய ரகசியம் உணர்த்தி, வரம்பற்ற மெய்ஞானமும், வள்ளலார் அருளிய மரண வறுமை தீர்க்கும் குருபிரானின் நாத மருந்தை நாம் அருந்தும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கிரிதரன்:* ஆகம விதிப்படி அமைந்த கோவில்கள் உணர்த்தும் அகமிய ரகசியம் அறிய வைத்து, நரனை மனிதனாகப் பெற்றெடுத்த மாதாவும், ஆறாம் அறிவை அறியும் அறிவைத் தந்த பிதாவும், பிரம்ம வித்தை அருளிய குருவும், எமபயம் கடத்தும் இறைவனும் ஒருவரே. அவரே மெய்க் குருபிரான்.

*ஜீவசகோதரர் குமரேசன்:* புலன் வழி செல்லாது புண்ணிய வழி செல்லும் வழியே மெய்வழி. அவ்வழி நம்மை அயராது நடத்துவதே ஆதி மார்க்க னீதி அவை. அகமியத்தில் சிதம்பர நடனம் காணும் சின்னஞ்சிறு வாசல் அறிய வைத்து ஜீவேசத்தகை வாழ்வு வாழ வழியருளும் ஆசானின் வாய்மையே யாதொன்றும் தீதிலாத சொல்.

*ஜீவசகோதரர் சுகுமார்:* வாழ்நாளை வீணாக்கும் மனதின் மாயக்கூத்தே நம்மை சுல்தானாகவும் சைத்தானாகவும் மாற்ற வல்லது. நம் பாவம் நீக்கி பிறவிப்பிணி மாற்றும் ஜீவகங்காவின் வான் பொதிகைத் தென்றலே மெய்க் குருபிரான் அருளும் நாத மருந்து.

ஜீவ சகோதர சகோதரிகளின் முத்திப் பேருரையுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

## 09-05-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

**அம்மையே அப்பா ஒப்பிலா மணியே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
ஆறாம் அறிவே செல்வமாகவும் சிவபதமாகவும் இருப்பதை அறிவிக்க சத்திய னில உலகிற்கு வருபவர்களே பாரவான்கள். நாள் மற்றும் கோளினுள்தான் மனிதப் பிறப்பின் ரகசியம் உள்ளது. கோள்களை குருவருளால் கடந்தவனே காலமற்ற இடத்தில் வாழ்கிறான். அணுவுக்கு அணுவாய் இருந்து அண்ட பிரம்மாண்டத்தை ஆக்கி இயக்குவது இறை சக்தியே.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் : வாக்கியம் 03-ன் தொடர்ச்சி :** னீதி எனும் பொருள் ஆன மனுவே மெய்ஞானத்தை உணர்ந்து, ஈசன் அரூபமாகவும், மனுஈசன் உருவமாகவும் இருப்பதை அறிகிறான். கலிமாப் பொருளை தன்னில் அறிந்து சிவபதம் பெற்றவர்களே, ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

**குருபிரான் அருளமுதம் - பிள்ளைத் தமிழ் :**
அன்பெனும் விசேஷத்தை அறிந்த தனக்குவமை இல்லா மெய்ஆசானின் அன்பே வீண் மனுவை ஈசனாக்கி சிவமாக்கும் வல்லமை உள்ளது. அலைவுறும் மனதை அலைவற்று இருக்கச் செய்யவே சாலை ஆண்டவர்கள் **தாலோ தாலேலோ** என அருளியுள்ளார்கள். பேருறக்கம் எனும் பூரணத்தை அறிந்தோரே பிறவாமை பெற்று மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வர். தூங்காமல் தூங்கச் செய்யும் மாகலையே தாயாக விளங்குகிறாள். கடின மனம், வைராக்கியம், கதி சாதனையே மெய் அறிவை பெறுவதற்கான வழியாகும். கங்குல் பகலற்ற, சத்தம் பிறக்கும் அத்தனின் இருப்பிடத்தை அறிவிப்பதே பிள்ளைத் தமிழ்.

**குருபிரான் அருளமுதம் - மெய்ம்மண ஞானம் :**
சப்த சப்தாதிய சாயலே ஜீவனின் அடையாளம். மாறிக் கொண்டே இருக்கும் அழிவுடலே மாயக்கூத்து. இதை உணர்ந்து குருவருளால் பிரம்ம ஞானமாகிய அறிவெனும் தூய ஞானச்சுடர் கொண்டு மனதை வென்றவர்களே தன்னை வென்றவர்கள். அவரவரும் தன்னுள் விளங்கும் பிறை வடிவாகிய அறிவை அறிந்து எந்நேரமும் சந்திரகலா நிதியின் வசம் இருக்க வேண்டும் எனும் ஆசானின் ஆசீர்பாத ஒலிவா உரையுடனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 11-05-2024 ~ சனிக்கிழமை ~ சத்துவாச்சாரி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

சாலை ஆண்டவர்கள் அருளிய **அழியாப்பதி குடியேறிய நாயகமென் குருவின்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:*

அழியாப் பதி குடியேறிய நாயகத்தின் துணை கொண்டே காலனை வெல்ல முடியும். உலகில் தோன்றிய யாவரும் செத்திடம், பிறந்த இடம், இனி சாகாதிருக்கும் இடம் பற்றி அறிந்திட ஒரு மெய்க்குருவின் துணை நிச்சயம் வேண்டும். அழிவுலகில் அனித்திய உடலுடன் வாழும் நாம், நித்திய உடலுடன் நிரந்தரமாக வாழும் சொந்த வீடே இனி சாகாதிருக்கும் இடம். கலங்கிய நம் மனதை தெளியச் செய்து, உயிராகிய பிராணனையும் சிற்றம்பலப் பொருளாகிய ஜீவனையும் அறியச் செய்து, மரண வறுமை தீர்க்கும் மாமருந்தே ஆசானின் வாய்மை. பற்றற்ற பரம்பொருளை பற்றியவர்க்கே அழிவுலகப் பற்று விடுபடும். வேதத்தின் இருப்பிடமே முகம் என்ற நடுக்கருவாக உள்ளது. அறிவை அறியாமல் உலக மக்கள் வாயில் சொல்லும் மந்திரங்கள் யாவும் அறிந்த மக்களுக்கு கண்டு தரிசிக்கும் பொருளாக உள்ளது. வாழும் போதே குருவருளால் கைலாயம் சென்று வரும் வித்தையே பிரம்மவித்தை.

**ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்**
**மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்** **(திருக்கொரல் - 214)**

என்ற வள்ளுவர் வாக்கின்படி குருவின் செயலுக்கு ஒத்துப் பழகியே அவரவருள் இருக்கும் ஒத்த பொருளை அறிய முடியும். மனதாகிய சைதன்யப் பொருளை வென்று, தன் கைவசம் கொண்ட ஞான சைதன்ய அரசே முருகப்பெருமான். தொண்டர்களின் உள்ளமாகிய மகா ஆசனமே இறைவனின் சிம்மாசனம். குருவருளால் நான்கு தேக ரகசியமும், நற்றாளும் அறிந்து வினை தீர்வதே விடுதலை எனும் முக்தி. வினை புரியும் மனதில் இருந்து விடுபடச் செய்யும் மெய் வணக்கத்தை அறிவிக்கும் எல்லை திசையற்ற குருவின் நாதமே திசை. இல்லமெனும் பஞ்ஞாட்சர மந்திரமே அறுபடை வீடாக, தில்லையாக உள்ளது. நம் பேர் வடிவம் மாற்றி, தன் பேர் வடிவம் தந்த உத்தம சுத்த உறுதி னாயகமான ஆசானின் அன்பே நம்மை சிவமாக்கும் என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

## 12-05-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவி தெய்வம் அருளிய **வாழ்வீர் சாலோக மாமுதல் சாயுச்யம்...** என்ற வாழ்த்துப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

வயதிலோ உருவிலோ அன்றி அறிவிற் சிறந்தோரே பெரியோர் என்பதற்கு மெய்ஞ்ஞானம் பெற்ற முதுவயது அப்பரும், இளவயது சம்பந்தருமே சாட்சி. மனிதனிடத்தில் உள்ள ஆறறிவும் சேர்ந்து ஓரறிவாய் விளங்குவதே இறைவன். அகமியத்தில் இருக்கும் அஷ்டதிசை தலைவனை அறிவதே தன்னை அறிதல். இறைவன் மனிதனுக்கு தந்த தனிச் சீதனமே மனமாகிய பளிங்கு மாளிகை, அது அசுத்தமாவதின் காரணம் அறியாமையே. மனம் அசையா சைவ நிலையே **அடக்கம் அமரருள் உய்க்கும்** என்பதாகும். சார்ந்ததின் வண்ணமாக மாறும் மனமாகிய தண்ணீர் கீழ் நோக்கி ஓடாமல் ஆவியாக்கி மேல் நோக்கமாக்கும் செயலே பிரம்மவித்தை. நித்தமும் செத்துக் கொண்டிருக்கும் நாம், சாகாது பேரின்ப வாழ்வு வாழ இறைவன் தந்த சாதனமே மனம். **சரம் பார்ப்பான் பரம் பார்ப்பான்** என பெரியோர்கள் அருளியுள்ளபடி சரமாகிய சமரச சன்மார்க்க பஞ்சாட்சரத்தை கண்டவர்களே பிணி மூப்பு சாக்காடு அணுகாத ஏதேன் தோட்டத்தில் வாழத் தகுதியானவர்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

கர்த்தராகிய குருபிரான் தன் ஜீவசுவாசத்தை ஊதிய பிறகே ஒருவன் ஜீவாத்மா ஆகிறான். ஜீவாத்மா கவனமுடன் பரமாத்ம நிலையில் இரண்டற கலக்கும் போது பரமாத்மா ஆகிறது. உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரமாகிய இறை இல்லத்தில் குடியேறி வாழ்வதே மனம் செம்மையாகும் வழி. சிதம்பரத்தில் பெருமாள், சிவனின் நடனம் காணும் ஐதீகம் **அரியும் சிவனும் ஒன்று** என உணர்த்தவே.

ஆதிசேஷனின் மறு அவதாரமான பதஞ்சலி முனிவரும், புலிக்கால் முனிவரான வியாக்ரபாதரும், சிவனின் நடனம் கண்ட தலமாக, பதஞ்சலி முனிவரின் ஜீவசமாதியின் இருப்பிடமாக விளங்குவதே ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவில். பதஞ்சலி முனிவர் அருளிய யோக சூத்திர நிலை யாவற்றையும் சாலை ஆண்டவர்கள் தன் மக்களுக்கு அருளிய உன்னதம் உணர்த்தும் திருவிழாவே வைகாசித் திருவிழா. அன்னையர் தினமான இன்று மெய்வழி சாவித்திரி அம்மா அவர்களின் ஐந்தாம் வருட ஆண்டு பூர்த்தி கொண்டாடப்பெற்றது. பத்துவயது கன்னித்தாயே, உலகிலுள்ள சர்வ உயிர்களுக்கும் தாயாகவும், இன்னும் தன் சூலிலிருந்து வெளியாக்கி ஆக்கும் சூட்சாதி சூட்சவித்தாக அவரவர் நாமமாக விளங்குகிறது என அறிந்து உணர்ந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவை மக்கள் என்ற குருபிரானின் அருளுரையுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

## 12-05-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பரிசுத்த ஆவி தெய்வம் பிரம்ம பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
ஜீவாத்மா-பரமாத்மா இரண்டும் ஒன்றே. ஐம்புல நுகர்வின் தலைவனை இயக்கும் காரண தேகத்தை குருவருளால் அறிந்த பின்பே, ஜீவசிம்மாசனத்தில் குடியேற முடியும். புலி போல் பாயும் தன்மையுடைய மனதை சங்காரம் செய்து அதன் தோலை ஆடையாக அணிவதையே **பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து...** என்ற தேவாரப் பாடல் உணர்த்துகிறது. மேல் நோக்கமான எண்ணம் உள்ளோரே இறை தூதர்களை சந்திக்கும் வாய்ப்பை பெறுகின்றனர். சர்வ மூலமந்திர நிரூபியாகிய சுயம்பிரகாச பிரம்மப் பிரகாசத்தை சாலை ஆண்டவர்கள் மந்திரமாக எடுத்து வைத்து தங்களின் அஞ்ஞன சலாகையால் குருடாயிருந்த நம் கண்களை திறந்துள்ளார்கள். அவையின் அங்கத்தினராக சேர்வதென்பது குருபிரானின் ஞான ஆகாயப் பெருவெளியில் சேர்வதேயாகும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆதி மார்க்க னீதி அவையின் அத்தனை செயல்களும் குருபிரானின் வழிகாட்டுதலின் படியே நடைபெறுகின்றன. அங்கத்தினர் யாவரும் ஆசான் தன் வண்ணவுடல் அங்கமே நாமெனவும், அவர்களின் கை ஆயுதம் நாமென எண்ணுவதுமே சக ஜீவப்பிறவியருடன் பேதமின்றி வாழ்வதற்கான வழியாகும். தன்னறிவாகிய நமது சிற்றறிவில் சாய்ந்து விடாமல் பேரறிவாகிய ஆசானின் சொல் கேட்டு நடப்பதே ஞானம் பெறுவதற்கான சுருக்கமான வழி. பெரியோர்கள் அருளியுள்ள மந்திரமாகிய வேத எழுத்துக்கள் யாவும் மெய்ஆசான் துணை கொண்டே அறிய முடியும். உயிரினும் மேலான ஒழுக்கமே மெய்யான மெய்வழியில் நம்மை வாழச்செய்யும்.

**குருபிரான் அருளமுதம்:** தன்னை அறிய வழிகாட்டும் தலங்களே புறத்தில் உள்ள ஆலயங்கள். நெற்றியில் இடுவதும் அவரவரின் பெயரும் குறிக்கும் சொல் நாமம். அகமியத்தில் சாகாத்தலை, வேகாக்கால், போகப்புனலாக உள்ள இதுவே மெய்ஞானத்தின் அடிநாதம். நீதி எனும் ஜீவனாகிய சிற்றம்பலப்பொருள் தன் கைவசம் ஆனவனே மனு. நின்றதொரு பிரளயத்தின் அதிசயத்தை கண்டவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். தெய்வீக மா மரத்தை மா மதயானை எனும் மனம் மறைத்ததால் மனிதனுக்கு தன்னை அறியும் அறிவு இல்லை. மெய்ப்பொருள் காணும் அறிவினுள் தான் மதம் உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai 

**விதியெலாம் கண்டோன் போல**
**வேடங்கள் போட்டு வந்து**
**விதிபோலே யாகு மென்று**
**விளம்பிவாய்ப் புலம்பும் பேய்காள்**
**விதிபோலே யாகு மானால்**
**வேதமும் வேலை யேனோ**
**மதியுனக் கெதற்கு ஈந்நான்**
**வயிறுவளர்ப் பதற்கோ கூட்டில்** **( குரு முறாதி )**

என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள படி விதியை வெல்லும் மதியை அறிவு வடிவாக வரும் ஆசான் அருளால் அறிந்து காலத்தை வென்று நித்திய பேரின்ப வாழ்வு வாழலாம் என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

*சரீரிகளுக்குக் குரவனே சிவம், குரவனே தேவன், குரவனே பந்து, குரவனே ஆத்மா, குரவனே ஜீவன், குரவனுக்கு வேறானதில்லை.*

***~ குரு கீதை***

## 16-05-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் அருளிய **அறங்ங ளொருங் திரண்டொரு வீடு...** எனும் திருப்பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
செங்கமலத் தாயாக இருக்கும் ஜீவனின் போக்குவரத்தே தொனி. **அவன் இன்றி ஓரணுவும் அசையாது எனும் பெரிய ஆப்தர் மொழி அதனை கேளீரோ** என்ற தாயுமானபிரபு அவர்களின் சத்திய வார்த்தையை செயலளவில் உணர்ந்த மக்களே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள்.

**எமன்படர்அடிபடு திருமெய்ஞ்ஞான கொரல் : வாக்கியம் எண் 03ன் தொடர்ச்சி :** சர்வ உபதேச ரகசியமும் தெரிந்தவன் எமன். ஒருவன் காதில் கேட்ட உபதேசத்தை கண்டு எமன் அஞ்சுவதில்லை. உபதேசம் நிறைவேறும் இடம் அவரவரின் அறிவிருக்கும் தலமாகிய உள்ளமாகும்.

*ஜீவசகோதரர் ரியாஸ்:* **அல் குரான் :** வந்த வேதமாகிய மெய்க்குருபிரான் தன் இரக்கத்தால் நரனை மனுவாக்கி சாயுச்ய பதவிக்கு உரியவனாக மாற்றுகிறார்கள். மனதை கடிவாளமிட்டு முத்மயின்னா எனும் நபுசை விட்டு விலகி, வாசியெனும் குதிரையேறி மெகராஜ் எனும் தலம் செல்வோரே அறிவு வடிவினர்.

**குருபிரான் அருளமுதம்:** சாலை ஆண்டவர்கள் ஈரேழு உலகத்தின் ரகசியத்தை தங்களின் **தௌஹீது மக்காம்** பாடல் மூலமாக அருளியுள்ளார்கள். மனிதனின் முக்குணத்தை நிர்க்குணமாக்கும் வல்லபம் பெரியோர்களின் வாய்மைக்கே உண்டு. குணம் மாறாத ஒருவன் 64 தீட்சை பெற்றாலும் நரகில்தான் விழுவான். சிபத்து நிலைக்கு மாறி நிர்க்குண நிலை பெற்றவர்களே சிவானுபவத்தை உணர்வர். மெய்யெனும் பிரகாசத்தையும் பொய்யெனும் இருளையும் அறிந்த பின்பே, நாம் இந்த பொய் உடல் அல்ல என்ற உண்மை தெரிய வரும்.



Copyright © AMNA Trust, Chennai 

**மெய்ம்மண ஞானம்:** கதியெனும் உஜூது நடையின் ரகசியம் வைத்து பூட்டப் பெற்றதே சாலை ஆண்டவர்கள் அருளிய திருப்பாடல்கள். இதனை ஓயாது படிக்க உணர்வு ஓங்கும் என்பதனை கூர்மதி கொண்டோரே அறிவர். முதலும் முடிவுமற்ற முழுமையான மும்மூலத்திற்கும் மூலமாக இருக்கும் ஆதியை அறிந்து, அதுவாக ஆனவரே நடுநிலை கண்ட நாயகம். தன் குருனாதரைக் காப்பாக வைத்து அருளியதே சாலை ஆண்டவர்களின் திருப்பாடல்கள் யாவும். காலன் அணுகாத இடத்தை அடைவதற்கான வித்தையே பிரம்மவித்தை. ஆசான் அருளால் அறியாமையை விட்டு விலகி, ஜீவனின் மாறாத மெய்ம்மணத்தில் கலந்து பேரின்பம் அனுபவிக்கும் செயலையே சாலை ஆண்டவர்கள் மெய்ம்மண ஞானமாக அருளியுள்ளார்கள். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 18-05-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்ம பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **நடந்நறியாப் பெருங்நாட்டில் னல்வழி யீதென...** என்ற ஐவணத் தளிர் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* பிறவி சுழல் எனும் பெருங்காட்டில் வழி தெரியாமல் அலைந்த நம்மை ஆட்கொண்டு, நல்வழி இன்னதென காட்டி, அறிவின் லட்சணம் உணர்த்தி, வியக்கும் படியான பல தேவ ரகசிய செயல்களை அவரவர் பக்குவத்திற்கேற்ப நயத்துடன் அருளும் குருபிரானின் நாமமானது தொல் புவியும், வானமும் கொள்ளாத பேராற்றல் கொண்டதாகும்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - வாக்கியம் எண் 175: மா** தவம் புரிந்து வரும் குருபெருமானிடத்தில் ஒன்றுபட்டு இருப்பவர்களே மானிடன் என்ற தெய்வத் திருவாக்கின் படி, அபுரூப சிவகுரு வரதரின் அருளால் அண்டாண்ட விஸ்வரூப தரிசனையை காண்பதற்கு முன் மானிடமாக இருந்த நாம், அதனைக் கண்ட பின் மானிடர் என்ற பதத்திற்கு உரியவர்கள் ஆகிறோம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* **மெய்ம்மண ஞானம்**

உலகிலுள்ள சர்வ மணங்களையும் இன்னது, இன்னதென பிரித்து அறியச் செய்யும் அறிவின் மணமே மெய்ம்மணம். எட்டுத் திக்கும் வீசும் மணமாக அவரவரின் உயிரில் கலந்திருக்கும் மெய் மணத்தை அறிய வைப்பவரே மெய் குருபிரான். **உயிரினை காட்டுவார் உலக மெய் குருபரன்** என்ற தெய்வத் திருவாக்கின் படி, நம்மிடத்தில் நடுப்பொருளாக விளங்கிக் கொண்டிருக்கும் உயிரை காட்டுவது குருவின் நாதமே. மாறா மெய்ம்மணத்தில் ஆசானின் நாதத்தில் மயங்கிய சீடர்களே, அங்கிங் கெனாத படி, எங்கும் பிரகாசமாய் ஆனந்த கூத்தாடிக் கொண்டிருக்கும் இறைபொருளை கண்டு தரிசித்து மெய்யான வாழ்வில் குடியேறி பேரின்பத்தில் திளைக்கிறார்கள். நீதிச் சொல் மணம் வீசும் ஆதி நாயகனின் நாதத் தொனியே நம்மை அரசாண்டு, பூவின் மணம் போலே பூர்வீக ஆவியாய் நிற்கும் மெய்ம்மணத்தை உணரச் செய்கிறது. உயிரின் மேன்மையை உணர்ந்த உயர் குடி பிறப்பான மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் என்ற பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

*வேத சாஸ்திரங்ஙளிற் சுகமில்லை. மந்நிர யந்நிரங்ஙளிலும் சுகமில்லை. பூமியில் குரவனின் அருட்பிரசாதம் வழங்ஙப்பெறும் க்ஷேத்திரத்திற்கு அன்னியமான இடங்ஙளில் சுகமென்ப தில்லை.*

***~ குரு கீதை***



*Copyright © AMNA Trust, Chennai* *June 2024*

## 19-05-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. சரசுபதி மணிவண்ணன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் அருளிய **வாழ்வனைத்தும் தந்நெனது குலமுழுதும் தனையாண்டு...** என்ற ஞான அகவல் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் பழனிசெல்வராஜ்:* பசி தாகம் தூக்கம் யாவற்றையும் இயக்கும் அறிவை அறிய வைத்து, நம் மனதின் கோணலை நேர் செய்து, அறியாமை அகற்றி மனுவாக மாற்றி அறவழி செலுத்தி தேவராக்க வந்த வேதத்தாயே குருபிரான்.

*ஜீவசகோதரர் திருமூர்த்தி:* ஆசான் அருளும் பிரம்மவித்தை மூலம் அகமியத்தில் சிற்றணு வடிவாகிய ஆன்மா இன்னதென அறிந்து அதனை ஆதி புள்ளியில் அடங்கச் செய்வதே அடக்கமாகும்.

*ஜீவசகோதரர் கருப்பசாமி:* போலி குருமார்களிடம் பெறும் உபதேசமும் வழிபாடுகளும் வீண் என்பதை, ஆதி மார்க்க னீதி அவையின் மெய்க் குருபிரானின் சொல் ஒரு பொருள் கொண்டே அறிய முடியும். அகமியத்தில் எட்டாத நிலைகள் எல்லாம் ஏற்றி வைக்கும் ஆசான் அவர்களே அவ்வெனும் ஓரறிவாகிய தெய்வம்.

*ஜீவசகோதரி பானு ரியாஸ்:* அல்லாஹ் ஒருவனே இறைவன், இஸ்லாம் ஒன்றே மதம் எனும் அறியாமை அகற்றி சர்வ மதங்களும் இறைவனும் ஒன்றென அறிய வைக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை. இஸ்லாத்தின் ஐந்து கடமைகளும், ஹலால் எனும் புண்ணியமும், ஹராம் எனும் பாவமும், அகமியத்தில் இன்னதென ஒரு மெய் குருபிரான் மூலம் அறிந்து வாழ்பவரே நிஜமான இஸ்லாம்.

*ஜீவசகோதரி விமலா ராஜேந்திரன்:* ஜீவன் முக்தி, அடக்கம் என்பதனை இருக்கும் போதே அகமியத்தில் அனுபவிக்கும் வழியை, வழி சரியாய்ச் சென்ற குருவே அருள முடியும். பிரம்மவித்தை அருளும் குருபிரானிடம் எதார்த்த உள்ளமுடன் சரணாகதி அடைந்தே நம் மனதை அறிவாக மாற்ற முடியும்.

*ஜீவசகோதரி வளர்மதி (ஈரோடு) :* அறியாமல் செய்த ஆன்மீக வழிபாடு அத்தனையும் ஆற்றில் கரைத்த புளி என ஒரு மெய்ஆசானை சந்திக்கும் போதே விளங்கும். பஞ்சபூதம் கடந்த அருட்பெருஞ்ஜோதியும், பட்டினத்து சுவாமி கைக்கரும்பும், ஜீவகாருண்யமும் உணர்த்தும் அகமியச் செயலை, நாதம் விளைந்த நாதன் அருளும், நாத மருந்தை அருந்தி மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம்.

*ஜீவசகோதரி வசந்தி வெங்கடேசமுத்து:* மனிதன் தன்னை அறிவதற்கே இறைவன் படைத்த எழுவகை தோற்றமும் நால்வகை யோனியும். நம் உயிரை அறியும் அறிவே அறிவு. நம் உள்ளத்தில் அறிவுப் பிரகாசம் ஏற்றி வைக்கும் மெய் ஆசானாம் ஞான சூரியனே, நம் சுவாசத்தின் ரகசியமும், வயதின் ரகசியமும் அறிய வைத்து ஜீவனை சிவனாக மாற்றுகிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* தேடாமல் கிட்டிய ஞானத்தின் அருமையை உணர, எதார்த்த உள்ளமும் வைராக்கியமும் வேண்டும். அநியாய மரணத்திற்கு ஆளாகாமல் தப்பிக்க இறைவன் மனிதனுக்கு கொடுத்த தனிச்சீதனமே அமானிதம். ஞானக் கடலாக வரும் மெய்க் குருபிரானே, ஞானக் கடலில் முத்து எடுத்து மாலையாக்கி நமக்கு சூட்டுகிறார்கள்.

ஜீவ சகோதர, சகோதரிகளின் முத்திப் பேருரையுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 21-05-2024 ~ செவ்வாய்க்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

மெய்வழி ஆண்டவர்களின் திருவடி போற்றி **பாதியெனும் இரவுறங்கி...** எனும் மாணிக்கவாசகப் பிரானின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.



**குருபிரான் அருளமுதம்:**
சமத்துவம், சமரசம், மனிதநேயம் யாவும் வாழ்ந்து காட்டுவதாகும். ஜீவனாகிய சிவலிங்கத்துடன் இரண்டறக் கலந்து அக்கண்ணை அறிந்து சிவானுபவம் பெற்றவனே ஜெகத்துக்கு நாதன். **பசி வரப் பத்தும் பறந்திடும் என்ற சொல் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களுக்கு பசி வரப் பத்தும் பொருந்திடும்** என்பதாக உள்ளது. ஞானத்திற்கு தடையாக பசிப்பிணி இருக்கக் கூடாது என்பதே பெரியோர்களின் இரக்க சிந்தனையாகும்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம் 03ன் தொடர்ச்சி:** மெய்வழி ஆண்டவர்கள் பெற்று வந்த சர்வ சன்னதங்களும் இன்னதுதான் என ஒரு மெய்க்குருபிரான் நம் அகமியத்தில் அறிவிக்கும் போதே அறிய முடியும்.

**குருபிரான் அருளமுதம் – மெய்ம்மண ஞானம்:** நாம் கண்டு விண்ட யாவும் பாழான அநித்தியமே. வெளிக்குள் இருக்கும் இருளும் ஒளியும் இன்னதென அறிந்தவனுக்கு அருளாகவும், அறியாதவனுக்கு இருளாகவும் உள்ளது. முப்பால் கடந்து அப்பால் உள்ள பாலம் தாண்டி கரைகாணும் மலகூத்தின் ரகசியம் அறிந்தவரே பண்டை வேதியர். காலக் கோள்களின் உள்ளிருக்கும் பிறப்பு இறப்பின் ரகசியத்தை அறியச் செய்யும் கொண்டல் வாய்மையே மாறாத மெய்ம் மணம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* மெய்யான ஆலயத்தையும் நிஜமான தெய்வத்தையும் கண்டவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். இறைவன் தந்த அமானிதக் கடனை தீர்ப்பதற்கான வழியே சாகாக்கல்வி. குருவருளால் பழகும் இக்கல்விக்காக செலவிடும் அழிபொருள் பொய்க் கல்வியுடன் ஒப்பிடுகையில் மிகவும் அற்ப சொற்பமே. ஊர் கூடி இழுக்கும் தேரின் வடம் பிடித்தால் புண்ணியம் என்றால், நம் தேகமெனும் தேராகிய ரதத்தை இழுக்கும் வடமாகிய கயிற்றைப் பிடிப்பதே மிகவும் மேலான புண்ணியம். அதனை அருளும் ஆசானே புண்ணியத்தின் உரு. அவர்கள், தான் பெற்ற மெய்யை உலகெங்கும் பரவச் செய்யும் பரோபகாரச் செயலுக்கு நாமும் தோள் கொடுத்து இணங்கி இருப்பதே நமது தலையாய கடமையாகும்.

**குருபிரான் அருளமுதம்:** அருவுருவாய் நம்மை ஆண்டு கொண்டிருக்கும் சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்தால் கலிமாப் பொருளறிந்த ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திரு நாமத்தை ஓங்கி உரத்த குரலில் அறிக்கை செய்வதற்கான அருகதையுடனும் அறிவுடனும் தகுதியுடனும் இருக்க வேண்டும் என்ற குருபிரானின் அருளமுதுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 25-05-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**குருபிரான் அருளமுதம் :**

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் – 176 :** சர்வ நாமங்களுக்கும் இருப்பிடமாய், தனக்கென ஒரு நாமமுமிலாத **அது** எனும் பிரம்மத்தில் கலப்பதுவே அதிஷ்டம். கோடா அணுக் கோடி மறைகளும் புகழும் பாதமான ஜீவனை அறிந்து, நம் மரண வறுமையைப் போக்கிக் கொள்வதே அதிஷ்டம். வேதமெனும் கிரந்தமாகிய முடிச்சின் ரகசியம் அறியும் உபதேசம் கேட்டு அதன்படி நடப்பதே மெய்வழி வாழ்வாகும்.

**திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்** என்பது திருமூலர் வாக்கு. மூவாசையால் குற்றம் செய்தவன், நீதியால் தண்டனை பெற்று சிறைக்கைதி ஆகிறான். ஆறாம் அறிவு பெற்ற மனிதனின் வயது, எண்ணம், மனம் யாவும் குற்றமாகவே உள்ளது. இறைவன் தனிச்சீதனமாகத் தந்த அறிவைத் தவறான வழியில் செலவு செய்து கடமை தவறிய மனிதனுக்கு இறைவன் வழங்கும் தண்டனையே மரணம். வான் குலமான சிவன் குலத்தில் பிறந்தவனே எமபயத்தைத் தாண்டி வாழ்வான் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

ஐவழி விளைவிற்கு அப்பால் உள்ள மெய்வழியை அடைய மெய்ஆசானிடம் சாகாக்கல்வியை பழக வேண்டியதே னீதியெனும் பொருளான மனுவின் கடமையாகும். நீதி வழி பற்றி அடக்கம் மடக்கிப் பிடித்தவருக்கே பத்து அடையாளம் நிஜமாகும். தன்னை அறிந்தவனுக்கே சிவனும், ஜீவனும், எமனும் ஒன்று எனப் புரியும். மெய் ஞானத்தை வெல்ல குருபிரான் அருளும் நாத மருந்தை அருந்த ஒழுக்கம், வைராக்கியம், திடகவனம் மிக அவசியமாகும். பிண்டத்தில் சிறைப் பட்டிருக்கும் நரனை மீட்டு முத்தியெனும் இறவாமையில் ஆக்குவதே ஞானிகளின் செயலாகும். அமானிதக் கடன் கட்டியவன் ஜெயில் அதிகாரி போன்றும், கட்டாதவன் தண்டனை பெற்ற சிறைக் கைதி போன்றும் உள்ளான்.

*ஜீவசகோதரர் தாமோதரன்:* உயர் அதிகாரிகளின் சிபாரிசின் மூலமே சிறைச்சாலை உள்ளே சென்று பார்க்க முடியும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போல், கைதிகள் மன நிம்மதியற்ற முகத்துடன் காணப் படுகின்றனர். குறுகிய அறையுள் அடைபட்டுக் கிடக்கும் அவர்கள் விடுதலை பெற்றாலும் உடலெனும் சிறையில் உள்ளவரை அவமான வாழ்வே வாழ்கின்றனர். எண்ணத்தில் விளையும் தீமையே சொல், செயலாகி குற்றத்திற்கு ஏதுவாகிறது. எனவே எண்ணம், சொல், செயல் மூன்றிலும் நன்மையே செய்து குருவருளால் தேகமெனும் சிறையிலிருந்து விடுதலை பெறுவதே பிறவா நெறியாகும்.

**குருபிரான் அருளமுதம் – மெய்ம்மண ஞானம் :** பண்டை நான்மறை ரகசியம் பகர்பவரே பழம் புராதனராகிய குருபிரான். மும்மலம் கடந்து மும்மூலம் வென்று நெருப்பாறு மயிர்ப்பாலம் தாண்டும் வித்தையே மலகூத்து. திங்களூர் வீதியான அறிவு வழியே சிவராஜபாட்டை. அதில் வழிகூடி நடப்பவர்களே தொண்டர்கள். சப்த சப்தாதிய சாயலே அமானிதத்தின் அடையாளம். அருள் நாவின் மூலம் நம் அறியாமை விலக்கும் ஆசானின் நாதமே அருட்பெருஞ்ஜோதி.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்தால் ஆதி மார்க்க னீதி அவையின் மக்கள் நால்வகை யோனியும் எழுவகைத் தோற்றமும் தன்னுள் அறிந்துள்ளனர். குருபிரானின் கொண்டல் வாய்மையால் முத்தொழில் புரியும் மும்மூர்த்திகளும் நம்மை விட்டு அகன்ற நாளே கோடிசூர்யப் பிரகாசம் கை வரவான திருநாளாகும். குருபிரான் அருளிய உபதேசத்தை சொல்லாலும் செயலாலும் வெளியிடாது காக்கும் செயலே **கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்** என்பதாம். கேட்டதும் கேளாததும் தரும் கற்பக விருட்சத்தின் நிழலில் எமபயம் கடந்து வாழும் பேரின்ப வாழ்வே மரணமிலாப் பெருவாழ்வு என்ற குருபிரானின் அருளமுதுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai June 2024

## 26-05-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **சத்தியம் திரண்ட சாயுச்சியக் கடலே...** எனும் குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
புராதனமான மெய்யைச் சுமந்து வரும் குருபிரானே எதார்த்த உள்ளம் கொண்ட மக்களின் மரணபயத்தை நீக்கி மெய்வழி எனும் மேடேறச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரர் பொன்செல்வம்:* மெய்வழி எனும் குருஷேத்திரத்தில் வாழும் குருவின் நாதத்தை செவி மடுப்பதே செவிச்செல்வம். தூலத்துடன் பழம் புராதன மெய்யை சுமந்து வரும் குருபிரான், ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலமாக நம்மை ஆக்கும் செயல் நடைபெறும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரர் ஆனமலையான்:* நம் தூலம் உள்ள போதே தெய்வத் திருநாட்டிற்கு போய் வரும் மெய்க் கல்வியை பழக்கித் தரும் வல்லபம் உள்ளவரே மெய்க் குருபிரான்.

*ஜீவசகோதரர் பாண்டி:* மெய் வணக்கமே நம்மை சரண கமலாலயத்தில் புகுத்தாட்டி வைக்கும். மெய்யும் பொய்யும் நம்மிடம் பிரித்துக்காட்டி சிவ நிலைக்கு ஏற்றி வைக்கும் குருவாகிய சிவனே அருட்பெருஞ்ஜோதி.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* மெய் கூறும் வந்த வேதமாகிய ஆசானே நம் மரணபயம் நீக்கி அபயம் அளிப்பவர். மரணமிலாப் பெருவாழ்வு, உயிரின் ரகசியம், வாழ்வின் நெறி இவற்றை அறிவிக்க வந்ததுவே கோவில்கள். மதியை அறியாதவனுக்கு அதுவே மனம் எனும் மறலியாகிறது. குருவருளால் சாமுன் சாகப் பழகுவதே வாழும்கலை. குருவின் திருவடி நிழலே வஞ்சப்புலன் சதியிலிருந்து நம்மை மீட்கும்.

*ஜீவசகோதரர் தட்சிணாமூர்த்தி:* அடக்கத்தை மடக்கிப்பிடித்து அவரவருள் இருக்கும் இறைவனை அறியச் செய்யும் ஒலிவா மலையே குருபிரான்.

*ஜீவசகோதரர் குபேர்:* நமது நெஞ்சகமாகிய நடு வீட்டில் இருக்கும் சொந்த தேகமாகிய மூல மந்திரத்தை தரிசிக்கச் செய்து, கற்றவனாக நம்மை மாற்றும் புராதனரே மெய்க் குருபிரான்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* குருபிரானின் பேரிரக்கமே நம் பிறவிப்பிணி தீர்க்கும். அவர்களின் அன்பெனும் நாத மருந்தே நம்மை நித்தியப் பொருளில் நாட்டமுறச் செய்து சிவமாக்கும். மனித ரூபம் தாங்கி வரும் இறை வடிவான குருபிரானே தன்னை அறியும் தவமுறையில் தளராது நம்மை பழக்குகிறார்கள்.

*ஜீவசகோதரர் அருண்:* வாழ்வாங்கு வாழும் வழிநெறி அறிவிப்பவரே ஆசான். அனித்திய வடிவுடல் நாமல்ல என அறிய வைப்பவரே வடிவுடைஅம்மன். நம் தன்னறிவு கொண்டு அறிய இயலாத ஒன்றை அறியச் செய்பவர்களே தன்னை அறிந்த தவசீலர்கள். சிற்றணு வடிவாக விளங்கும் ஆன்மா, அறிவெனும் உணர்வாக இருப்பதை அறிகின்ற அறிவை அருள்பவரே வாலைத்தாய்.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஆறறிவுடன் விளங்கும் மனதை அறியும் அஷ்டாங்க யோகம் கடந்து அறிவிருக்கும் தலம் அறிய வைக்கும் பிரம்மவித்தை அருள்பவரே பிரம்மநிஷ்டர். பரம்பொருளின் திருநாமத்தை அறிக்கை செய்யும் தகுதி உள்ளவர்களாக நாம் ஆக வேண்டும்.

**குருபிரான் அருளமுதம்:**
மெய்ப்பொருளை கண்டு பழகும் பழக்கமே மெய் அனுபவத்தை தரும் மெய்க்கல்வி என்ற குருபிரானின் அருளமுதுடனும், பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.


Copyright © AMNA Trust, Chennai

## 30-05-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

சாலை ஆண்டவர்கள் அருளிய **திருவெ னுமிமை யானாடு டையவர்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
இமயத்திலிருக்கும் இமய வரம்பனாகிய இறைவன் என்பது, குருவருளால் மெய்யெனும் ஜீவனின் ரகசியம் அறிந்து பழகி வரும் செயலாக உள்ளது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் எண் 3-ன் தொடர்ச்சி:** ஆசான் அருளால் மூச்சடங்கும் மோனநிலை அறிந்து, கவனமுடன் ஐம்புல கதவை அடைக்கும் பேரறிவே உபதேசம். இதனை செயலாக உணர்ந்த மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

**மெய்ம்மண ஞானம்:**
அடக்கம் மடக்கிப் பிடிக்கும் உயிர்க்கணக்கும், ஈரேழு உலக ரகசியமும், சோடச நிலையும் பொதிந்த திருப்பாடலே ஆண்டவர்கள் அருளியுள்ள மெய்ம்மண ஞானம். ஆசான் அருளால் தன்னை அறியும் அறிவாகிய சூக்கும தேகமே மனிதனின் தனிச் சீதனமாகிய அமானிதம். எட்டிரண்டும் பத்தான இடம் கண்டு வலம்புரிச் சங்கை ஊதும் வித்தையே பிரம்மவித்தை. நடுவறிந்து உரைப்பவர்களே சன்மார்க்க நாதரெனும் நாயகம்.

நாதாந்த திறவுகோலில் திருவள்ளுவர் அருளிய முப்பாழ் கடந்து செல்லும் செயலே முப்பாலெனும் மவுத்தின் இருப்பிடமாக உள்ளது. இதனை அறிவிக்கும் மெய்வழி குருமார் சொல்லே மேல்நோக்கம். அலிஃப்-லாம்-மீம் என்பதே அவரவரின் நாமத்திற்குரிய திருச்சிற்றம்பல பொருள். உயிர்ப்படங்கல் எனும் பரிபூரண நிலையே சாகாத்தலையின் ரகசியமாக உள்ளது. ஃ எனும் பிரம்மத்தின் அருளொளியான நுதற்கண் கொண்டவர்களே மெய்க் குருபிரான். பரிபாஷையாக விளங்கும் பதினெண்ணாயிரம் ஆலங்களும், மூவுலகும், முச்சுடரின் ரகசியமும் குருவின் தயவால்தான் அறிய இயலும். முத்தொழில் புரியும் முப்பதியற்ற நிலையே கொண்டல் வாய்மை அருளிய பேரின்ப நிலை.

ஜடசூரியனும் கண்டு நாணும் கோடி சூர்யப் பிரகாசமே மனிதனை பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளி. பிறப்பு இறப்பின் ரகசியம் அடங்கிய நாளும் கோளும் உள்ள இடமே ஆகாயம். அசலான உயிரின் நிலைப்பிடம் அறிவிக்கும் நகல் வடிவே ஆலயங்கள். திருப் பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்ட நீலகண்டனே உப்புக் கடலின் தன்மையும் உரைக்க வல்லவர். ஆசானை அறிந்து, அறிவெனும் திருவை அறிய 12 ஆண்டுகள் ஆகும் என்பது சாலை ஆண்டவர்கள் திருவாக்கு. அஞ்ஞான வேரறுக்கும் பரமகாந்தள சூலமே சுடாத தீ.

ஓடும் சுவாசம் ஒடுங்குமிடம் அறிவதே வீண் நாளை வாழ்நாள் ஆக்கும். சாலை ஆண்டவர்கள் அருளிய பாற்கடலை காய்ச்சி வடித்திட்ட வேதாந்தம், எழுத்து எண்ணி படிக்க வேண்டிய ஒன்றாகும். நாதம் விளைந்தவர்களே சன்னதப் பாரவான்கள். சர்வத்தையும் தனக்குள் அடக்கி வைத்திருக்கும் ஆகாயம் மனுவின் தலையுள் அடங்கி, எழுதாத எழுத்தாக உள்ளது. மாசறும் தேசிகர் தனிகை மணிப்பிரான், சாலை ஆண்டவர்களுக்கு வழங்கிய திரு நாமமே **வாக்மி மார்க்க னன்னாதர்** என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்புகள்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**05-05-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **தாகமும் தணியான் தன்னுயிர் அறியாத்...** என்ற **ஞான முறையீடு** ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து சாலை ஆண்டவர்கள் அருளிய **ஞான அகவல்** மற்றும் **ஞான முறையீடு** பாடல்கள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

**19-05-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆதி னாயகம் அரசர் னாயகம்...** என்ற **மெய்ம்மண ஞானம்** காப்புப் பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து அதே பாடல் வரிகள் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

**26-05-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய **அப்பன் என்னுடை அன்னை தேசிகன்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் அவர்களின் வழி காட்டுதலுடன் **மாணிக்க வாசகர் அருளிய திருஞானத் தாழிசைப் பாடல்கள்** மோகன ராகத்தில் தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

## குரு வா ஆழ்க! குருவே துணை!

*தனித்தவராய், ஆசையற்றவராய், சாந்நராய், வியாகூலம், அசூயை முதலியவை யில்லாதவராய், மாறா இளமை உடையவராய், எவர் ஒருவர் விளங்குகின்றாரோ அவரே பிரம்மஞானி யெனப்பெறுகின்றார்..*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai June 2024

# ஆதி மார்க்க நீதி அவையின் 2024 – மே மாதம் நிகழ்வுகள்

**01-05-2024 – ஞாயிற்றுக்கிழமை:** குருபிரான் சாலை ரவி அப்பா, தூத்துக்குடி எழுந்தருளி, மெய்இச்சை ஆர்வம் கொண்ட மக்களுக்கு அருளமுதம் வழங்கினார்கள்.










**12-05-2024 – ஞாயிற்றுக்கிழமை:** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திருமுன்பாக சிவகாசியில் மெய்வழி சாவித்திரி அனந்தகி அவர்களின் ஐந்தாவது ஆண்டு பூர்த்தி விழா சிறப்பாக நடைபெற்றது.





Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 மே மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 75**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**

**Account Number: 50200047470073**

**IFSC: HDFC0000323**

**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு****: இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 35 – Month: June 2024*